# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102182

1. District : விருதுநகர் PS: ஊ.த.க. பிரிவு Year: 2023 FIR No.: 02/2023 Date: 23.05.23
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Corruption Act - 1988 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: as Amended in 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 18.05.23 Date to : 22.05.23
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : 13.00 hrs Time to : 13.30 hrs.
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : Time : 17.00 hrs.
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.05.23 நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) Time :
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் மாந்தோப்பு கிராம நிர்வாக அலுவலகம் சுமார் 19 கி.மீ வடகிழக்கு.
   Beat Number : (b) Address :
   முறைக் காவல் எண் முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு.வே.கிருஷ்ணன் (b) Father's/ Husband's Name : திரு.வேலுத்தேவர்
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு 1956 நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : (g) Address : கதவு எண்.2/98, முத்தாலம்மன் கோவில் தெரு,
   தொழில் டீக்கடை முகவரி மாந்தோப்பு, காரியாபட்டி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு.ஏ.மாரி, கிராம நிர்வாக அலுவலர், மாந்தோப்பு வருவாய் கிராமம், காரியாபட்டி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   எதிரி கேட்ட கையூட்டு பணத்தை தயார் செய்ததால்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 23.05.2023 மாலை 17.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி தாலுகா, மாந்தோப்பு, முத்தாலம்மன் கோவில் தெரு, கதவு எண்.2/98 என்ற முகவரியைச் சேர்ந்த திரு.வேலுத்தேவர் என்பவரின் மகன் திரு.வே.கிருஷ்ணன் என்பவர் என் முன்பாக ஆஜராகி சொன்ன புகாரை மாலை 17.00 மணியிலிருந்து 17.45 மணிக்குள் அலுவலக கணினி மூலமாக தயார் செய்து, அந்த புகாரை பிரிண்ட் எடுத்து புகார்தாரரிடம் கொடுத்து படித்து பார்க்க சொன்னேன். அவர் படித்து பார்த்துவிட்டு அவர் சொன்னபடி சரியாக இருந்ததால் அதில் புகார்தாரர் திரு.வே.கிருஷ்ணன் கையொப்பம் செய்து, அந்த புகாரை வழங்கினார். மேற்படி புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 23.05.2023 மாலை 18.45 மணிக்கு

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. கிருஷ்ணன்
23.5.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

23.05.23 at 19:30 hrs.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. BOOMINATHAN
Rank: நிலை INSP. OF POLICE. No. எண் ........

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.02/2023 பிரிவு 7 of Prevention of Corruption (Amendment) Act-2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

கலம் 7-இல் கண்ட எதிரி திரு.குமார், கிராம நிர்வாக அலுவலர், மாந்தோப்பு கிராமம், விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2023 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption (Amendment) Act-2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். புகார் விபரம் பின்வருமாறு:- திரு.வே.கிருஷ்ணன், வயது 65/2023, த/பெ.வேலுத்தேவர், எண்.2/98, முத்தாலம்மன் கோவில் தெரு, மாந்தோப்பு, காரியாப்பட்டி தாலுகா, விருதுநகர் மாவட்டம் என்பவர் இன்று 23.05.2023 மாலை 17.00 மணிக்கு என் முன்பாக ஆஜராகி சொன்ன புகார் விபரம் பின்வருமாறு:- நான் விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டி தாலுகா, மாந்தோப்பு கிராமத்தில் கதவு எண் 2/98, என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகி இரண்டு மகள்களும், இரண்டு மகன்களும் உள்ளனர். அனைவருக்கும் திருமணமாகி தனித்தனியே வெளியூரில் வசித்து வருகிறார்கள். என் மனைவி கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். நான் 6ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். சரியாக எழுத தெரியாது. ஆனால் படிக்க தெரியும். நான் என்னுடைய ஊரைச்சேர்ந்த ஐயப்பன் மகன் ஸ்ரீராம் என்பவரிடமிருந்து 190/2 மற்றும் 190/3A ஆகிய சர்வே எண்கள் கொண்ட புன்செய் நிலத்தில் சரிபாதியான 62.5 செண்ட் நிலத்தை காரியாப்பட்டி சார்பதிவக ஆவண எண்.3889/2022இன்படி 28.10.2022ஆம் தேதி எனது பெயருக்கு கிரையம் பெற்றேன். அவ்வாறு கிரையம் பெற்ற மேற்படி நிலத்தை சப்டிவிசன் செய்து எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி கடந்த 17.05.2023ஆம் தேதி காரியாபட்டியில் உள்ள இ-சேவை மையத்தில் தேவையான ஆவணங்களை சமர்ப்பித்து உரிய அரசு கட்டணம் செலுத்தி பதிவேற்றம் செய்தேன். அதற்காக எனக்கு ஒரு ஒப்புகைசீட்டு தந்தார்கள். அந்த ஒப்புகைசீட்டுடன் மறுநாள் 18.05.2023ஆம் தேதி மதியம் சுமார் 01.00 மணியளவில் மாந்தோப்பு கிராம நிர்வாக அலுவலகம் சென்று, அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் திரு.குமார் அவர்களை சந்தித்து சப்டிவிசன் பட்டா பெயர் மாற்றம் தொடர்பாக இ-சேவை மையத்தில் பதிவு செய்த ஒப்புகைசீட்டை அவரிடம் காண்பித்து விபரம் கேட்டேன். அப்போது அவர் என்னிடம், உங்களது மனு எனது பார்வைக்கு வந்துள்ளது, அதை நான் பார்த்துவிட்டேன், சப்டிவிசன் செய்து உங்க பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய பணம் ரூ.10,000/- செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான், அவரிடம் சார் நான் டீக்கடை வைத்துதான் தொழில் செய்து வருகிறேன், என்னால அவ்வளவு பணம் புரட்ட முடியாதுங்கசார் என்று சொன்னேன். அதற்கு அவர் நீங்க ரூ.10,000/- பணத்தை கொண்டுவந்து என்னிடம் கொடுத்தாதான் சப்டிவிசன் செய்து, உங்க பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்வேன் என்று சொன்னார். அவருக்கு

லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமுமில்லை, அப்போது என்னிடம் அவ்வளவு பணமும் இல்லை. அதனால் அவரிடம் இப்ப பணம் இல்ல சார் என்று சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். பின்னர் மீண்டும் நேற்று (22.05.2023) மதியம் சுமார் 01.30 மணியளவில் மாந்தோப்பு கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று கிராம நிர்வாக அலுவலர் திரு.குமார் அவர்களை சந்தித்து, சப்டிவிசன் பட்டா பெயர் மாற்றம் சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர் என்னிடம், என்னங்க நான் கேட்ட பணம் ரூ.10,000/- ரெடி பண்ணி கொண்டு வந்திருக்கீங்களா என்று கேட்டார். அதற்கு நான், சார் அது விசயமாதான் உங்கள பார்க்க வந்தேன். நீங்க கேட்ட ரூ.10,000/- பணத்தை என்னால புரட்ட முடியல சார், ரொம்ப கஷ்டப்பட்டவன் சார், நீங்க பார்த்து பணமில்லாமல் சப்டிவிசன் பட்டா மாற்றி கொடுங்க சார் என்றும் சொன்னேன். அதற்கு அவர் என்னிடம், நீங்க ரொம்ப கஷ்டபடுறதா சொல்றதால ரூ.4,000/-த்தை குறைச்சுக்கிட்டு ரூ.6,000/- பணத்தையாவது கொண்டுவந்து என்கிட்ட கொடுங்க என்றும், அந்த பணத்தை கொண்டுவந்து என்கிட்ட கொடுத்தாதான் சப்டிவிசன் செய்து, உங்க பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்வேன் என்று கண்டிப்புடன் சொன்னார். அவருக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும் நான் அப்போது அவரிடம் வேறுவழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். வீட்டிற்கு வந்து யோசனை செய்து பார்த்ததில் நியாயமாக செய்ய வேண்டிய அரசு வேலைக்கு நாம் ஏன் லஞ்சப்பணம் தரணும், லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் செய்யலாம் என்று நினைத்து, மாந்தோப்பு வி.ஏ.ஓ திரு.குமார் கேட்ட ரூ.6,000/- லஞ்சப்பணத்தை ரெடிபண்ணி கொண்டுவந்துள்ளேன். என்னுடைய பெயரில் உள்ள இடத்திற்கு சப்டிவிசன் செய்து, என்னுடைய பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்வதற்கு என்னிடம் ரூ.6,000/- பணத்தை லஞ்சமாக கேட்ட மாந்தோப்பு வி.ஏ.ஓ திரு.குமார் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். படித்து பார்த்தேன். நான் சொன்னபடி சரியாக இருந்தது. இப்படிக்கு (sd), V.கிருஷ்ணன் 23.05.2023, Sir, Received by me between 17.00 hrs. and 17.45 hrs. on 23.05.2023. The genuiness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.02/2023 u/s 7 of P.C. (Amendment) Act 2018 on 23.05.2023 at 18.45 hrs and took up for investigation. (Sd) (R.Boominathan) 23.05.2023 Inspector of Police, V&AC, VNR.